சாதி ஒழிப்பு ஜாலவித்தை!

Regd. No.
Phone No. 4502

4 பக்கம் | விலை அரை அணா

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. | MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (17—8—49) | வெளியீடு (18—8—49) [இதழ் 8

ஜாதியும் தொலையவேண்டும்! ஜாதித் தொழில்களையும் கற்கவேண்டும்!

அறிவியல் வளர்ச்சியை அழிக்கும் அதர்ம உபதேசம்!

கவர்னர் ஜெனரல் வகுக்கும் புதிய "கண்ணன் காட்டிய வழி!"

"ஒரு சமுகத்தில், நடுத்தர வகுப்பினருக்கு வருவாய் தரும் வேலைகள், மக்கள் பெருக்கத்திற்கு ஏற்றபடி, வளர்ந்து வரவேண்டுவது முக்கியம். அதன்படி, வளரவில்லையானால், அவர்களிடை, வேலையில்லா நெருக்கடி ஏற்பட்டே தீரும். இந்நிலை ஏற்படாமல் இருக்கவேண்டுமானால், நடுத்தர வகுப்புக் குழந்தைகள், ஜாதி வேற்றுமை உணர்ச்சி இல்லாமல், மற்றத் தொழிலாளர்கள் செய்யும் வேலைகளைக் கற்றுக்கொள்ள முன்வரவேண்டும். அவ்வாறு வேலை செய்யத்தயங்குவது மோசமான ஜாதி புத்தியே யாகும்."

"விவசாயிகள், தச்சர்கள், தட்டார்கள், நாவிதர்கள் முதலியவர்களின் சேவை சமுகத்திற்கு இன்றியமையாதது, இவர்களுடைய சேவை இருக்கும்படியாக இந்தியா என்ன செய்யப்போகிறது? வீட்டோடு தொழில் பயிற்சி பெறுவதால்தான், அப்பயிற்சியை செம்மையாகப் பெறுவதற்கு முடியும். ஒரு பள்ளிக்கூடத்திலோ அல்லது வேறு நிறுவனத்திலோ தொழிற் பயிற்சி பெறுவதைவிட, தந்தையிடமிருந்து, மகன், தொழிலைக் கற்றுக்கொள்வதே, சுலபமாகவும் திறமையாகவும் கற்றுக்கொள்வதற்கும் [illegible]ந்த வழி."

குழந்தைகள் வாரத்தில் மூன்று நாட்கள் மட்டும் பள்ளிக்கூடம் போனால் போதும், மற்ற நாட்களில் தங்கள் தகப்பனார் செய்து வரும் தொழிலைப் பழகிக்கொள்ள [illegible] வேண்டும்."

"கைத்தொழில் பள்ளிக்கூடங்கள் அதிகம் இல்லாததால், நமது குழந்தைகள் வீடுகளிலேயே தொழில் பழக வேண்டியிருக்கிறது."

"பாட்டாளி மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்திருப்பதால், நடுத்தர மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்."

கவர்னர் ஜெனரல் இராஜகோபாலாச்சாரியார், மேல் குறித்துள்ளபடி, சில நாளைக்கு முன், பம்பாய் நகரில் பேசி இருக்கிறார். பம்பாய், இத்துணைக்கண்டத்திலேயே தொழிற்சாலைகள் மிகுந்த இடம்; தொழிலாளிகள் பெருத்த இடம். தொழிலாளர்களுடைய வாழ்க்கைத்தரம், இன்று மிக மிக உயர்ந்திருக்கிறதாக, முதலாளிகளும், அவரைத் தாங்கிக் கொண்டு இருப்போரும், பறைசாற்றிவருகிறார்கள். இன்றியமையாத உணவுப் பொருள்களின் விலைப் பட்டியைப் பார்ப்பவர்களுக்கு, ஒவ்வொருவரின் வாழ்க்கைச் செலவும் எந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறது, என்பதை உணர்ந்து கொள்ள முடியும். வாழ்க்கைச் செலவிற்கேற்ப, எந்தத் தொழிலாளியின் கூலியும் சரி செய்யப்படவில்லை. வீக்கமடைந்த பணம், பெருமை பேசவும், மற்றவர்களின் பொருமைக்குத் தங்களை உள்ளாக்கிக் கொள்ளவும் தான், தொழிலாளர்களுக்குப் பயன்படுகிறதேயன்றி, வாழ்க்கை வசதியைச் செய்து கொள்வதற்குத் துணை செய்யவுமில்லை. பணம் படைத்தோர் மேலும் பணக்காரர்களாகவும், ஏழைகள் மேலும் மேலும் பிச்சைக்காரர்களாகவும் வழி செய்யும் போக்கில் தான், இந்திய அரசாங்கத்தின் பொருளாதார நடவடிக்கைகள் இருந்து வருகின்றன. இதனைக் கவர்னர் ஜெனரல் அறியாதவர், என்று எவரும் சொல்ல முன்வரமாட்டார்கள்.

ஆங்கிலேயர்கள், அவர்கள் நாட்டின் நலத்திற்கு, இந்தியத் துணைக்கண்டத்தைக் கட்டியாண்டு, சுரண்டி வந்தார்கள் என்றால், சுயராஜ்ய சர்க்கார், சுதேச முதலாளிகளுக்கு-அவர்கள் ஏவியவழி, சுரண்டலுக்கு ஏற்பாடு செய்துகொண்டு வருகிறது. அதுவும், அதிவிரைவாகக், காரியமாற்றப்படுகிறது. உற்பத்தியைப்பெருக்க, மந்திரிமார்கள் ஒருமிக்க, விடாமல்வாய் வலிக்கக் கூறிக்கொண்டு இருக்கிறபொழுதுதான், பொருள்கள் வாங்குவாரற்றுத் தேங்கிக் கிடக்கிறது, அவை விற்பனையாக, ஏதாவது வழிசெய்யுங்கள் என்று, அறிக்கைமேல் அறிக்கை வெளிவந்துகொண்டு இருக்கின்றன. இதற்கு சர்க்காரின் சமாதானமும், மறுப்பும் கிளம்பிக் கொண்டு இருக்கின்றன. ஆலைகள் மூடப்பட்டு, தொழிலாளர்கள் வெளியில் வேலையின்றி விரட்டப்படுகிறார்கள். மற்றத் தொழிலாளர்களுக்கு, இது அச்சத்தை ஊட்டக் கூடியதாக இருப்பதோடு, வரவிருக்கும் பயங்கரப் பொருளாதார நெருக்கடியை, முன்னர் கூட்டியே சர்க்காருக்கு அறி

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]

அபூர்வ ஆராய்ச்சி!

"பக்திமார்க்கம்"-கடைப்பிடியும்-சிரமம் இல்லை!

அது ஆராய்ச்சி அல்ல - ஆபாசம்!

பெரியார் திருமண ஆதரவாளர்களிலே சிலர், அபூர்வமான ஆராய்ச்சியிலே அதிகதூரம், ஈடுபட்டிருக்கிறார்கள். ஆராய்ச்சி தேவைதான், என்றாலும், அப்படி! சிலர், செய்துகாட்டும், ஆராய்ச்சியைப் பார்க்கும்போது, நமக்கு எத்தகைய உலகத்திலே நாம் வாழுகிறோம், என்று அச்சத்தோடு, எண்ணிடச் செய்கிறது.

யாரும் எதிர்பாராத ஆராய்ச்சி! யாரும், வெளியே கூறத் துணியக்கூடமாட்டார்கள். அவ்விதமான ஆராய்ச்சி முடிவுகளை வெளியிட்டு, பெரியாரும், அப்படி இருப்பின் எத்தனையோ அழகுள்ள கல்லூரி மாணவிகளும் தனியே பேசும் வாய்ப்பு கிடைத்திருந்த சமயத்தில், சந்தேகம் கேட்கவந்த பெண்ணிடம் ஏன் லீலைகள் செய்யாது விட்டுவிட்டார். இதை யார் கண்டது? என்றும் கேட்கலாம். ஆம், உண்மையான கேள்வி. அதற்கு அவர் பளபளப்பான முகம் பதில் சொல்லும். இந்திரியத்தை வெளிவிடாமலிருப்பவருக்கு. சுபாஷ்சந்திர போசுக்கு

காலத்துக்கேற்ற கோலம்!



"சோளம், கேழ்வரகு, கம்பு, மைதா முதலியவைகளைச் சாப்பிட்டுப் பழகிக்கொள்ள வேண்டும்" என்று 'செல்வ வாழ்வினர்'களுக்கு கவர்னர் ஜெனரல் விடுத்த வேண்டுகோள் விடுக்கிறார்.

Sankar's We-kley.

யாருக்கு அரண் கட்டித்தருவதாக, எண்ணிக்கொள்கிறார்கள், சில மெய்யன்பர்கள்!

அவர்களின் ஞானமார்க்கம் நீடூழிகாலம் வாழ்வதாக!!

இதோ பாருங்கள், ஒரு ஆராய்ச்சியாளரின், கருத்துரையை. "விடுதலை"யில் உள்ளது தான்-என் எழுத்தல்ல.

"பெரியார் இளம் வாலிபரல்ல, கலவியில் பற்றுகொள்ள. ஆண் பற்றுக [illegible] முகத்திலிருந்த வசீகரம், பளபளப்பு இருப்பதுபோல இருக்கும். உணருங்கள்."

எப்படி இருக்கிறது, ஆராய்ச்சி! பட்டம் பெற்ற ஆராய்ச்சியாளர்கள் என்று, யாரைப்பற்றி எல்லாமோ, இந்தப் பைத்தியக்கார உலகம், பேசுகிறது: இப்படிப்பட்ட ஆராய்ச்சியாளர் இருப்பது தெரியாமல்.

பளபளப்பும் பணமும், என்ற அவருடைய ஆராய்ச்சி உரையை, ஆவல் உலக ஆராய்ச்

யாளர் மன்றத்துக்கு அனுப்[illegible] வைப்பது, அரும்பெரும்[illegible] யாகும், என்று கூறுகிறே[illegible]

அந்த, பளபளப்பு, [illegible] அண்[illegible]யாளமாம்.

கவலையால, தூக்கமின்[illegible]யால், கோபத்தால், எப்பே[illegible]வது, பெரியாரின், முகம், சே[illegible]வாகக் காணப்பட்டு, மேனிம[illegible]

பெரியாரின் போக்[illegible] கண்டித்தும், அவர்மீது [illegible]பிக்கையில்லை என்று [illegible] வித்தும், இதுவரையில் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் கூட்டிக் கண்டனத் தீர்மானங்கள் அனுப்பிவைத்துள்ள கழகங்கள்:—

115

கண்டனத் தீர்மானங்க[illegible] அனுப்பியுள்ள கழகச் சா[illegible]டைய வேறு பல கழகங்கள்[illegible]

62

தங்கள் கண்டனத்[illegible] எழுந்து மூலம் இதுவரை[illegible] நமக்குத் தெரிவித்துள்ள [illegible]திய நிர்வாகக் கமிட்டி [illegible]பினர்கள்

32

[illegible]விருப்பதாகத் தெரியுமா[illegible] அவர், கண்டிப்பாக, மக்[illegible] முன், வராமலிருக்க [illegible] டும்-ஏனெனில், இந்த ஆராய்[illegible] பார்த்தேன், முடிவை, [illegible] கள், "ஏன், இன்று பெரி[illegible]ரின் முகம் வாட்டமாக இ[illegible]கிறது! தேஜஸ் குறை[illegible] இருக்கிறதே! அந்தப் [illegible] பளபளப்பைக் காணோமே! [illegible]விதமான மங்கலாக இருக்[illegible]தே! ஏன்?" என்றெல்ல[illegible] எண்ணவும், இவரு[illegible] ஆராய்ச்சிக் கட்டுரையில் [illegible] கருத்தை நிரூபிக்கத் தெ[illegible]

[தொடர்ச்சி 4-ம் பக்கம்]

மாலை மணி

சென்னை 17—8—49 புதன்கிழமை

புகழ்மாலை

அறிவின்சிகரம்!

பேரறிஞர்!

பகுத்தறிவுப் பகலவன்!

என்று, பலகூறிப் புகழ்கிறார்கள் பெரியாரை—அந்தப் புகழுரைகள் நமக்கேதோ தெரியாதவைபோலவும், அவருடைய அறிவாற்றலை நாம் ஏதோ அறியாதுபோனது போலவும், இவர்கள், நினைவூட்டி, கழகத்துக்கு அதன் ... பெரும்பணியாற்று ...பாலவும் எண்ணுகிறார் ...

...வந்திருக்கும் தொல்லையே, ...ர் அத்தகைய சிறப்புநிலை ...டைந்திருக்கிறவராயிற்றே, ...ப்படிப்பட்டவர், மிக மிகச் ...மானயரும் செய்ய எண் ... காரியம் செய்துகொண் ...ர, இதை வைத்துக் ...ண்டே, வைதிகபுரியினர், ...நடைய தரத்தைக் ...றத்துவிடுவார்களே, அவர் கூறும் கருத்தைச் சிதைத்து விடுவார்களே, அவரைப்பற்றி சரித்திரத்தில் தீட்டப்படும் போது, இவ்வளவு அறிவாற்றல் படைத்தவர், கடைசியில், மிக வயதேறிய நிலையில் திருமணம் செய்துகொண்டார், ஏதோ காரணம் காட்டி, அந்தத் திருமணம், அவர் செய்து வந்த பிரசாரத்துக்கே முற்றிலும் முரணானது என்றல்லவா, தீட்டுவார்கள், என்ற கவலை பிறந்ததால்தான்.

அவர் சாமானயராகவோ, நமக்கு இன்று, 'ஆதரவாளர்கள்' கவனப்படுத்திக் காட்டுகிறார்களே, அவ்விதமான, சிறப்புப் பெயர்கள் பல பெறுதவராகவோ, இருந்திருந்தால், அவருடைய இச்செயல், நாட்டிலே நடைபெறும் நாலாயிரம் தீய செயல்களிலே ஒன்று, என்ற அளவோடு போய்த் தொலையும். அவர், மிகமிக உன்னதமான நிலையில், புகழேணியின் உச்சியில் இருப்பதால்தான், ஒரு பெரிய இனத்தின் இதயக் காவலராக்கப்பட்டிருப்பதனால்தான், அவருடைய செயல், கவனிக்கப்படவும், கண்டிக்கப்படவும் வேண்டியதாயிற்று.

பிரிட்டனில், மோட்டார் ஓட்டும்மாரிசோ, பாக்டரியில் வேலை செய்யும், பாலோ, ஒரு லிலியையோ, ரோசையோ, திருமணம் செய்துகொண்டிருந்தால், பரபரப்பும், நிலைமை மாற்றங்களும் ஏற்பட்டிரா! முடி சூட்டிக்கொள்ளவேண்டிய முறையும் நிலையும் பெற்றிருந்த, எட்வர்டு அரு, சிம்சனைக் கலியாணம் செய்துகொள்வது என்று ஏற்பட்டதாலே தான், பிரிட்டனில், பெரியதோர் அரசியல் நெருக்கடி ஏற்பட்டது.

...ன்று, பெரியார் மீது புகழ் மாலை சூட்டி மகிழ்பவர்கள், அறியார்களா, மாலையில் தொடுத்துள்ள மலர்கள் (சிறப்புப் பெயர்கள்) பூத்திடச் செய்த பிரச்சாரப் பூந்தோட்டப் பண்ணை உழவர்கள்தான் நாம் என்பதை! நாம்,உளம்நொந்து,இந்நிலை பெருேம் என்பதை மறந்து, நாம் தந்த, மலர்களை மாலையாக்கிச் சூட்டி, ஏதோ, மகா பெரிய, மகத்தான, கட்சித்தொண்டு புரிந்து விட்டதாகக் கருதுகிறார்களே, பாபம்! இவர்கள், இன்று, என்னென்னவெல்லாம்கூறி, பெரியாரைப், புகழ்கிறார்களோ, அதேபுகழுரைகளைக் கல்லடிக்கும்சொல்லடிக்கும் மத்தியிலே நின்று, நாட்டிலே பரப்பி வந்தவர்கள் தானய்யா, இன்று, அந்தப் பெயருக்கு மாசு வருகிறதே, சரித்திரம் வேறுவிதமாகப் பொறித்து விடும் போலிருக்கிறதே, அதற்குப் பெரியாரின் செயல் இடம் தருகிறதே,என்று வருந்தி, விலகி நிற்பது. இதை உணரக் கண்ணியம் வேண்டும்!

பாராட்டி, ஆதரவுக்கடிதங்கள் தீட்டுகிறார்களே, அவர்களல்ல, நாட்டிலே, பெரியாரின் பெருமைகளை எடுத்துக் கூறிவந்தவர்கள்.

இனியேனும் அவர்கள் அப்பணியை மேற்கொள்வார்களா, என்பதும் சந்தேகமே,

அவர்களை அல்ல, மாற்றுக் கட்சியினரும், பொதுமக்களும், திருமண நிகழ்ச்சியைப் பற்றிக் கேலிகலந்த கேள்வி கேட்பது; நம்மைத்தான்—ஏனெனில் நாம்தான், பெரியாரின் பெருஞ் சிறப்புப்பற்றிப் பேசிவந்தவர்கள், எனவே பாரமும் பொறுப்பும் நமக்குத்தான் இருக்கிறது, எனவே தான், பாராட்டுரை வழங்கி விட்டுப்,பணிமுடிந்ததுஎன்று எண்ணும் 'ஆதரவாளர்' போலிருக்க முடியவில்லை. மாசுபோக்க என்னவழி, கழகக் கொள்கைக்கு நாட்டிலே நல்லிடம் கிடைக்க என்ன மார்க்கம், இதற்கு ஊறு நேரிடும் காரியம் செய்து விட்டாரே, தலைவர், என்று உள்ளம் நொந்து உழலவேண்டி இருக்கிறது.

பிரச்சாரப் பூங்காவிலே உதிர்ந்து கிடக்கும், பாராட்டு மலர்களை எடுத்துப்புகழ்மாலைதொடுத்து விடுவது, சுலபமான காரியம் —சுவையுள்ளதுங்கூட ஆனால் பயன்?

டிட்டோ சர்க்கார்-ரஷ்யாவின் எதிரியாகும்

சோவியத் ரஷ்யா மார்ஷல் டிட்டோவின் தலைமையில் நடைபெற்றுவரும் யூகோஸ்லேவேகியா அரசாங்கத்தை, எதிரி நாடெனப் பிரகடனப்படுத்தி விட்டது. குமுறிக் கொண்டிருந்த எரிமலை, கிழக்கு ஐரோப்பாவில் வெடித்துவிட்டது!

திருமணம்

மாதிவள் இலளெனில் வாழ்தல் இலளனும்
காதல் நெஞ்சக் காந்தமும், நாணத்
திரைக்குட் கிடந்து துடிக்கும் சேயிழை
நெஞ்ச இரும்பும் நெருங்கும்! மணம்பெறும்!

* * *

புணர்ச்சி இன்பம் கருதாப் பூவையின்
துணைப்பாடு கருதும் தூயோன், திருமணச்
சட்டத் தாற்பெறத் தக்க தீநிலை
இருப்பினும் அதனை மேற்கொளல் இல்லை,
அஃது திருமணம் அல்ல ஆதலால்!

* * *

என்தின வறிந்து தன்செங் காந்தள்
அரும்பு விரற்கிளி அலகு நகத்தால்
நன்று சொறிவாள் என்று கருதி
மணச்சட்டத்தால் மடக்க நினைப்பது,
திருந்திவரும் நாட்டுக்குத் தீய எடுத்துக்காட்டு!
மங்கையர் உலகின் மதிப்புக்குச் சாவு மணி!

* * *

மலம் மூடத்தான் மலர்பறித்தேன் எனில்
குளிர்மலர்ச் சோலை கோவென் றழாதா?

* * *

திருமண மின்றிச் செத்தான் அந்தச்
சில்லிட்ட பிணத்துக்குத் திருமணம் செய்ய
மெல்லிய வாழைக் கன்றை வெட்டுவது
புரோகிதன் புரட்டு நூல்! அதனைத்
திராவிடர் நெருப்பும் தீண்ட நாணுமே!

—புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

குட்டிக் கதைகள்

"மகா மட்டரகமான ஆசாமி!" என்று கோபமாகப் பேசிக்கொண்டே உள்ளே நுழைந்தார், உயர்திரு சதாசிவம்.

"யாரைப்பற்றிக் கோபம்?" என்று நான், கேட்டேன்.

"அந்த பொடிப்பயல், துரையண்ணுதான்!" என்றார், சதாசிவம்.

"என்ன சொன்னான், பயல்!" என்று நான் கேட்டேன்.

"போய்க் காலைக் கழுவி விட்டு உள்ளே வாரும்" என்று சொன்னான்; என்னைப்பார்த்து மட்டுமரியாதையின்றி; நாலுபேர் எதிரே சொன்னான்; என்றார் உயர்திரு சதாசிவத்தார்.

"அப்படியா சொன்னான்; என் தங்களை, காலைக் கழுவிக்கொண்டு உள்ளே வரச் சொன்னான்?" என்று நான் கேட்டேன்.

என்னமோ, என் காலில் மலத்தை மிதித்து விட்டேனும்; அதை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு இடம் அசுத்தமாகி விடும் என்று அட்டகாசமாகப் பேசுகிறான்" என்றார் அவர்.

"மலத்தை மிதித்துவிட்டது. உண்மைதானு?" என்று நான், கேட்டேன், தயக்கத்துடன்.

"ஆமாம்-அதனால்-அதற்காக-என் காலிலே, மலம் பட்டால், இவனுக்கு என்னவாம்" என்று சீறினார், சதாசிவத்தார். அவரோ உயர்திரு! உரைப்பதோ, சரியில்லைதான்! என்றாலும், எப்படி, அவர் எதிரே அதைச் சொல்வது? நான் திணடாடினேன். "பிறகு, என்னதான் செய்தீர்?" என்று கேட்டேன்.

"செய்வதாவது! பயல், கிடுகிடு வென நடுங்கும்படிச் செய்து விட்டேன். மலம், மலம், என்றால் நீ, ஏதோ, பெயரைக்கேட்ட மாத்திரத்தில், அது அசங்கியப்பொருள் என்று எண்ணிக்கொண்டு பேசுகிறாய்; மலம், என்பதும், நமக்குள் இருப்பதுதான்; என்று ஒருபோடு போட்டேன், பயல், கப்சிப் ஆகி விட்... என்றார் சதாசிவத்தார்.

...அகராதியை எடுத்து அவ்வளவு பெரியவர், வீசினால், பொடிபயல், என்ன செய்ய முடியும்.

ஆனால், ஊரார், கை கொட்டிச் சிரிக்கிறார்கள், சதாசிவத்தார். மலம் என்பதற்குப் புது வியாக்யானம் கூறக் கேட்டு.

2

"எங்கே சார், மானேஜர், வரக்காணும்" என்று கேட்டேன், புது உலகக காரியாலய உரிமையாளரைக் கண்டு.

"மானேஜரை, நிறுத்தி விட்டேன், வேலையிலிருந்து" என்றார் உரிமையாளர்.

"ஏன் சார்! மனுஷன். நல்லவனாயிற்றே. மாடு போல் உழைத்து வந்தான். என்ன தவறு செய்தான் என்று நிறுத்தி விட்டீர்" என்று நான், கேட்டேன். உரிமையாளர், கவனியாதவர் போலிருந்தார்.

"ஏன் சார், நிறுத்தி விட்டீர்கள் மனேஜரை?" என்று மீண்டும், கேட்டேன்.

"நிறுத்தாமல் என்ன செய்வது? அவன், வேலைக்கு இனி வரமுடியாது என்று கூறி விட்டான்!" என்றார், உரிமையாளர்.

அவர், போக்கை என்னென்பது. வேலைக்கு வர முடியாது என்று கூறி, மானேஜர், நின்று விட்டார்! அதை மறைக்க, இவராக, மானேஜரை, வேலையிலிருந்து, நீக்கி விட்டது போலப் பேசுகிறார், உரிமையாளர். உரிமையாளருக்கு, உண்மையை, மறைக்கக் கூடவா,உரிமை இருக்கலாகாது, என்ற எண்ணம் போலும்! இதென்ன பச்சைப் புளுகு பேசுகிறீரே!-என்று கேட்கத் தோன்றிற்று. கேட்டால், அவர், 'இது சொந்த விஷயம், இதிலே தலையிடுவது நாகரீகக் குறைவு' என்று பேசுவார். என் செய்வது! அவர் போக்கு பரிந்து விட்டது. அது போதும், என்று இருந்து விட்டேன்.

"தட்டிப் பார்க்கிறான்!

* * *

சத்தம் சரியாக இருக்கிறதா
என்று, பலரைக் கேட்டுப்
பார்க்கிறான்:

* * *

திருப்பித் திருப்பி, உற்றுப்
பார்க்கிறான்.
இது ஏன் இப்படி இருக்கிறது
என்று, வக்கணை பேசிப்
பார்க்கிறான்."

* * *

என்று, வேலாயுதனார், கோபமாக என்னிடம், கூறினார். யார், எதை, என்று விளக்கம் கேட்டேன்.

"அந்தப் போக்கிரிப் பயல், முத்தன் தான்" என்றார்.

"எதைத்தட்டிப் பார்த்தான் சரியா, என்று திருப்பித்திருப்பிக் கேட்டுப்பார்த்தான்?" என்று நான் கேட்டேன்.

"அடடே! நீ அவனுக்கு அண்ணன் போலப்பேசுகிறயே?" என்றார், கோபத்துடன், வேலாயுதனார்.

"புரியாததால் கேட்டேன்-எதைத் தட்டிப்பார்த்தான் முத்தன்?" என்று மீண்டும் கேட்டேன்.

"அடே, ஒரு நாலணு நாணயத்தை அப்பா!" என்றார் வேலாயுதனார்.

"ஏன்?" என்று நான் கேட்டேன்.

"அது செல்லாக்காசாம்!" என்றார் அவர்.

"பிறகு?" என்றேன் நான்.

"இதோபாரேன், அதை" என்று கூறி, என்னிடம் தந்தார், அந்த காலணு நாணயத்தை.

அது செல்லாக்காசு தான்;ஆனால் நான் அதைச் சொல்லவில்லை.

வீணுக, அவர் கோபத்துக்கு ஆளாவானேன் என்ற எண்ணம் தான்!

இதையும் பார்!

கார்டு, கவர் விலை கூடிற்று. இதனால் 1 கோடி ரூபாய் வரி உயர்ந்தது!

மோட்டார், நடுத்தர துணிவரி மூலம் ரூ-9 கோடி உயர்ந்தது!

சர்க்கரை வரி மூலம் ரூ. 1½ கோடி உயர்ந்தது!

பாக்கு வரியினால் ரூ, 1 கோடி கூடிற்று.

இரண்டாண்டு சுயராஜ்ய அரசியலில் ரூ. 50 கோடிக்கு அதிகமாக வரி உயர்ந்திருக்கிறது.

இவ்வளவும் ஏழைகள் முதுகின் மேல் ஏற்றப்பட்டுள்ளது. தாங்க முடியாத பெருஞ் சுமை! பொது ஜனசர்க்கார், என்று பேசிக்கொள்ளும் நேரு சர்க்கார், பணமூட்டைகளுக்குக் காட்டியுள்ள காருண்யத்தை, இத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கவேணடும்!

★

அதையும் பார்!

மூலதன இலாபவரி விலக்கல் மூலம் ரூ. 1 கோடி இலாபம்!

வருமானவரி, அமிதவரி சலுகை மூலம் ரூ. 6 கோடி இலாபம்!

எண்ணெய் விதை முதலிய பொருட்களின் ஏற்றுமதி வரி விலக்கல் மூலம் ரூ, 1½ கோடி இலாபம்!

விமானத்தபால் கட்டணத்தைக் குறைத்ததினால் இலாபம்!

பண்டிதரின் சர்க்கார் இவ்வளவு பாரபட்சமாக நடந்து வந்தபோதிலும், ஏழைகளால் நடத்தப்பெறும் ஏழைமக்கள் சர்க்கார்தான் என்பதை எவரும் நம்ப மறுக்கக் கூடாதே!